செ.வெ.எண். 21 நாள்: 12.01.2020

**வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகளை வாக்காளர் பட்டியல் பார்வையாளர் டாக்டர் .எம். மதிவாணன் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 12.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் கரகூர் மற்றும் பையூர் வாக்கு சாவடி மையங்களில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திவின் படி வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் டாக்டர் .எம். மதிவாணன் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 12.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 287 வாக்கு சாவடிகளில் புதிய வாக்களர் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்கள் மேற்கொள்வதற்கு படிவம் 6- படிவம் 6-ஏ, படிவம் 7-8- 8ஏ. என மொத்தம் 5952 மனுக்களும், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 292 வாக்கு சாவடிகளில் 5495 மனுக்களும், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 307 வாக்கு சாவடி மையங்களில் 6,181 மனுக்களும், வேப்பனஅள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 306- வாக்கு சாவடி மையங்களில் 6,745 மனுக்களும், ஓசூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 364 வாக்கு சாவடி மையங்களில் 9,169 மனுக்களும், தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 302 வாக்கு சாவடி யைமங்களில் 4, 911 மனுக்கள் என மொத்தம் 38,453 மனுக்கள் கடந்த 4.01.2020, 05.01.2020 மற்றும் 11.01.2020 ஆகிய மூன்று நாட்களில் வரப்பெற்றுள்ளது. இன்றும் (12.01.2020)அனைத்து வாக்கு சாவடிகளிலும் சிறப்பு திருத்த முறைக்கான மனுக்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் சிறப்பு திருத்த பணிகள் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் திரு. அமீர் பாஷா, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.ஜெயசங்கர், தேர்தல் வட்டாட்சியர் திரு. ராமசந்திரன், துணை வட்டாட்சியர்கள் திரு.குருநாதன், திரு.சின்னசாமி, வருவாய் ஆய்வாளர் திருமதி. ஜெயபிரியா, கிராம நிர்வாக அலுவலர் திருமதி.வள்ளி மற்றும் வாக்கு சாவடி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.